மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை.

**முன்னிலை :திரு. நா.சிவபழனி, B.A.B.L**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வக்கோட்டை.**

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ம் நாள் சனிக் கிழமை

2056 திருவள்ளுவராண்டு விஸ்வாவசு வருடம் கார்த்திகை திங்கள் 20 ம் நாள்

**அசல் வழக்கு எண்.119/2019 ல், இடைமனு எண்.4/2025**

இருதயசாமி ...மனுதாரர் / பிரதிவாதி

**//எதிர்//**

சகாயராஜ் ...எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு என் முன்பாக 06.12.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.V.S.முருகேசன், B.A., B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.B.தமிழ்செல்வன், B.A., B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை என் சீரிய பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது பிரதிவாதி தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி கோரி உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு கட்டளை 8 விதி 9 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் வழக்கின் முக்கிய உண்மை விசயங்கள் விடுபட்டு போய்விட்டது. மனுதாரருக்கும் அவரது வழக்கறிஞருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால், மனுதாரர் வேறுறொரு புதிய வழக்கறிஞரை அசல் வழக்கில்

நியமித்துள்ளார். மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கின் உண்மை நிலைகளை தெளிவுபடுத்த வேண்டியதாக உள்ளது. எனவே, மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய தக்க உத்தரவிட கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர் / வாதி தாக்கல் செய்த எதிர் உரையின் சுருக்கம்:</u>**

3. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு , அதன் பிறகு வழக்குச் சொத்தை நீதிமன்ற ஆணையர் இடப் பார்வை செய்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அதன் பிறகு தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு விரோதமாக உள்ளது. மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ள இந்த மனு ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. எனவே, இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா?**

5.இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் ஏதும் குறியிடப்படவில்லை.

**<u>தீர்வு:</u>**

6. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியாவார். எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக வழக்கு சொத்தை பொறுத்து, உரிமை விளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரம் கோரி அசல் வழக்கினை

தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு இருதரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இந்நிலையில், மனுதாரர் தரப்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் வழக்கின் முக்கிய உண்மை விசயங்கள் விடுபட்டு போய்விட்டதாகவும், கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கின் உண்மை நிலைகளை தெளிவுப்படுத்துவது அவசியமாக உள்ளதாகவும், எனவே, இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை அசல் வழக்கில் ஏற்று வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியது அவசியம் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு விரோதமாக உள்ளதாகவும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. அசல் வழக்கு இருதரப்பு சாட்சிய விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரரார் தரப்பு வழக்கின் உண்மை நிலையை தற்போது தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையின் மூலமே தெளிவுபடுத்த முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைக்கு ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்ததில், ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரைக்கும், தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரைக்கும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கூறியவாறு எந்தவித முரணாக விபரங்கள் எதுவும் இல்லை என்பதாலும், மேற்படி கூடுதல் எதிர்வழக்குரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்களுக்கு விளக்கமளிப்பதாக மட்டுமே உள்ளதாலும், மனுதாரர் தரப்பு வழக்கினை முன்னிலைப்படுத்துவதற்கு மனுதாரர் போதிய வாய்ப்பு அளிப்பது அவசியம் என்பதாலும், அதுவே நீதியின் நலனுக்கு உகந்தது என்று

இந்நீதிமன்றம் கருகிறது. இருந்தபோதிலும், எதிர்மனுதாரர் தரப்பிற்கு ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டு, செலவுத் தொகையுடன் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக, இம்மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.1000/-ஐ வருகின்ற 19.12.2025 ம் தேதியன்றோ, அதற்கு முன்பாகவோ வழங்க வேண்டும். மேற்படி நிபந்தனைகளை கடைப்பிடிக்க தவறும் பட்சத்தில் மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும்.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு,என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 06.12.2025 திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2025.12.06 17:39:09 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**

**<u>பின் இணைப்பு:</u>**

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>** இல்லை

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>** இல்லை

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2025.12.06 17:39:13 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வக்கோட்டை.**